REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 65630

# நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஐப்பசி 14உ புதன் (30—10—57) ★ ★ வெளியூர்: ஐப்பசி 15உ வியாழன் (31—10—57) [இதழ் 118

### இலஞ்சம் வாங்கும் அரசாங்க ஊழியர்கள்: கடுமையாகத் தண்டிக்க சட்டம் வருகிறது

இலஞ்சம் வாங்கும் அரசாங்க ஊழியர்களுக்குச் சிறைத் தண்டனையளிக்கும் மசோதா ஒன்று, மக்கள் சபையின் அடுத்த கூட்டத்தில் கொண்டு வரப்படுமெனத் தெரிகிறது. இலஞ்சக் குற்றத்தின்கீழ் தண்டிக்கப்படும் அரசாங்க ஊழியர்களுக்குக் குறைந்தபட்சம் ஓராண்டு சிறைவாசமளிக்கப்படும். இலஞ்சம் வாங்கிய அளவுக்கு அபராதங்களும் விதிக்கப்படும். குறைந்த தண்டனையளிக்க விரும்பினால் அதற்குரிய காரணங்களை நீதிபதி குறிப்பிடவேண்டும். அரசாங்கக் கம்பெனிகள், கார்ப்பொரேஷன்களில் பணியாற்றுபவர்களும் அரசாங்க ஊழியர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

# வெளிநாட்டு உதவியின்றேல் திட்டத்தின் கதி?

## 'திட்டத்தை வெட்டுக'— என்கிறார் தேஷ்முக்!

### 'அதனாலே தீங்கில்லை' என்று அறிவுரையும் தருகிறார்

நாகபுரி, அக். 28—

"வெளிநாடுகளிலிருந்து போதுமான பொருளுதவி கிடைக்கவில்லையென்றால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான செலவுகள் பெரும் அளவுக்குக் குறைக்கப்பட நேரிடும்"

—என்று, முன்னாள் மத்திய நிதியமைச்சர் சி. டி. தேஷ்முக் பத்திரிகை நிருபர்களிடம், குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"வெளி நாடுகளிலிருந்து நாம் எதிர்பார்க்கும் உதவி கிடைக்கவில்லையெனில், அந்தத் தொகையை ஈடு செய்வதென்பது இயலாது. அத்தகைய உதவியின்றி ரூ. 4,800 கோடி செலவு செய்ய இயலுமென்று எண்ணுவது மாபெரும் தவறாகும்.

"இப்போது இருக்கிற நிலை மிகவும் குழப்பமானது. வெளிநாட்டு உதவி எந்த அளவுக்குக் கிடைக்கக்கூடும் என்று யாரும் திட்டவட்டமாகக் கூறவில்லை. ஆனால் அங்கங்கே—சிற்சில மாநிலங்களில் சிற்சில திட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன; அல்லது ஒத்தி வைக்கப்பட்டுள்ளன என்று மட்டும் கேள்விப்படுகிறோம்.

"இனியும் வரிவிதிக்க ஏதும் வழி இல்லை யென்று நமது நிதியமைச்சரே ஒப்புக்கொள்ளுகிறார். எனவே, போதுமான அளவு மூலதனம் கிடைப்பதற்கு வழியில்லாதபோது, வரிப் பணத்தின் மூலம் அந்தப் பற்றாக் குறையை ஈடுசெய்ய முடியாது.

"ஆண்டொன்றுக்கு சிறு சேமிப்புகள் மூலம் ரூ. 100 கோடி கிடைக்குமென்று கணக்கிட்டார்கள்; ஆனால் கடந்த ஆண்டு கிடைத்ததோ ரூ. 65 கோடிதான்! இந்த ஆண்டு அந்தத் தொகைகூட கிடைக்குமா என்ற சந்தேகம் பலருக்கு ஏற்பட்டுள்ளது!

"நம் மக்கள் நல்ல வாழ்க்கை வசதிகளோடு வாழ்பவர்களல்ல—அன்றாடம் வயிற்றுப் பசியைப் போக்குவதற்கே போராடிக்கொண்டிருப்பவர்கள்!

"'நாட்டிலே பொருளாதார வசதி போதுமான அளவு இல்லாததால் திட்டத்தின் செலவைக் குறைக்கிறோம்' என்று அவர்களிடம் சொன்னால், அவர்கள் இருக்கின்ற நிலையை எளிதில் புரிந்து கொள்வார்கள்.

"அவ்வாறு திட்டத்தை வெட்டுவதன் மூலம் எத்தகைய ஆபத்தும் நேர்ந்துவிடாது. மக்களின் 'வாழ்க்கைத்தரம்' ஆண்டொன்றுக்கு 5 சதவிகிதம் உயரவேண்டும் என்று திட்டத்தின்படி மதிப்பிட்டிருக்கிறார்கள். அந்த உயர்வு 4 சதவிகிதமாக மாற்றப்படுவதால் எந்தவித எதிர்ப்பும் ஏற்பட்டுவிடாது; அதனாலேயே கம்யூனிசம் வளர்ந்துவிடும் என்று கருதுவது பெருந்தவறு.

"மக்களின் வாழ்க்கைத்தரம் இப்போது இருப்பதைப் போல் இரண்டு மடங்கு ஆவதற்கு 15 ஆண்டுகளுக்குப் பதிலாக 18 ஆண்டுகள் ஆகும்; அவ்வளவுதான்.

"மேலும், திட்டத்தின் வெற்றி விவசாய அபிவிருத்தியில்தான் அடங்கியுள்ளது. சில மாநிலங்களில், இருக்கின்ற நிலத்தில் மிகச் சிறு பகுதியே நீர்ப்பாசன வசதி பெற்றிருக்கிறது; ஆனால், மற்றும் சில மாநிலங்களில் அத்தகைய வசதிக்குட்படுத்தப்பட்ட நிலப்பரப்பு மிக அதிகம்"

## இஸ்ரேல் மக்கள்சபையில் வெடிகுண்டு வீச்சு

### பிரதமர் உட்பட மூவருக்குக் காயம்

ஜெரூசலம், அக். 29—

இஸ்ரேல் மக்கள்சபைக் கட்டிடத்தில் இன்று ஒரு வெடிகுண்டு வீசப்பட்டது; அதன் விளைவாக பிரதம மந்திரி உட்பட மூன்று மந்திரிகளுக்குச் சொற்பக் காயம் ஏற்பட்டது.

பார்வையாளர் காலரியிலிருந்து ஒரு இளைஞன் குண்டு வீசினான் என்றும், குண்டு பிரதம மந்திரியின் அருகில் விழுந்து வெடித்தது என்றும், இந்தச் சம்பவம் நடைபெற்றபோது சபையில் அயல்நாட்டு விவகாரங்கள் விவாதிக்கப்பட்டன என்றும், வெடிகுண்டு வீசியவன் கைது செய்யப்பட்டான் என்றும் கூறப்படுகிறது.

கபீர்சிம் எனும் இடத்தில் நடைபெற்ற படுகொலைகளின் முதலாவது ஆண்டுவிழா இன்று அரபுகளால் கொண்டாடப்படுகிறது; மேற்கூறிய சம்பவத்தில் 49 அரபுக் கிராம மக்கள் எல்லைப்புறப் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தகுந்தது.

பிரதமர் பென்குரியன், மத நிர்வாக மந்திரி ஷாபிரான், போக்குவரத்து மந்திரி சால்மெல் ஆகியோருக்குக் காயம்பட்டதாம்.

## 'சுரங்கவெடி வைத்து இரயிலைக் கவிழ்த்தனர்'

### 'கவிழ்ந்த இரயில்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்'

#### பர்மாவில் கலகக்காரர்கள் அட்டகாசம்

இரங்கூன், அக். 29—

மாந்தலே என்னுமிடத்திற்கருகில், பர்மா கம்யூனிஸ்டுக் 'கலகக்காரர்கள்' ஒரு இரயிலைச் சுரங்க வெடி வைத்துத் தாக்கினர் என்றும், விளைவாக 10 பிரயாணிகள் உயிரிழந்ததுடன், பலர் படுகாயமுற்றனர் என்றும் கூறப்படுகிறது.

கலகக்காரர்கள் மொத்தம் 32 சுரங்க வெடிகள் வைத்தனர் என்றும், இரயில் கவிழ்ந்ததும் மறைந்திருந்த 100 கலகக்காரர்கள் இரயில்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் கூறப்படுகிறது.

## கைத்தறி நெசவாளருக்கு கைவிரிப்பு!

சென்னை, அக். 29—

'கைத்தறி நெசவாளரின் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிக்கும் நோக்கத்துடன் ஒரு குழுவை அமைக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை' என்று தொழில் அமைச்சர் திரு. வெங்கட்ராமன் சட்ட மன்றத்தில் தெரிவித்தார்.

சென்னை, அக். 29—

'சேலத்தில் பொறியியல் கல்லூரி ஒன்றை ஆரம்பிக்கும் நோக்கம் இல்லை' என்று கல்வி அமைச்சர், சட்ட மன்றத்தில் தெரிவித்தார்.

## செய்யாத காரியத்துக்கு செலவு ரூ. 6-இலட்சம்?

### சாதனைகளில் ஒன்றாக சர்க்கார் விளம்பரம்

#### சட்டசபையில் உண்மை 'அம்பலம்'

சென்னை, அக். 29—

சங்கரன்கோயில் தாலுகாவில், காக்கையாறு ஓடும் வாயலிமலையடிப்பட்டி கிராமத்தின் நீர்ப்பாசன வசதியை அதிகரிக்க ஏதேனும் திட்டம் உண்டா? அப்படியானால், அது எப்போது எடுத்துக் கொள்ளப்படும்?" என்று காங்கிரஸ் உறுப்பினர் திரு. சுப்பையா உருக்கமுடன் கேட்டார்.

'இல்லை' என்று அமைச்சர் கக்கன் பதிலளித்தார்.

இதற்காக சென்னை அரசாங்கம் ஒரு திட்டம் தயாரித்து ரூ. 6 இலட்சம் செலவிட்டு, வெற்றியுடன் முடித்திருப்பதாக அரசாங்க விளம்பர இலாகா வெளியீட்டில் காணப்பட்டுள்ளதைப் பல உறுப்பினர்கள் சுட்டிக்காட்டிக் கேள்விகள் கேட்டனர். ('சென்னை செய்தி' என்னும் அரசாங்க விளம்பர இலாகா வெளியீட்டில் சர்க்கார் சாதனைகளில் ஒன்றாக இத்திட்டம் முடிவடைந்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.)

அமைச்சர் கக்கன் பதிலளிக்க முடியாமல் திண்டாடுவதைக் கண்ட நிதி அமைச்சர், குறுக்கிட்டு 'அரசாங்க விளம்பர இலாகா என் பொறுப்பில் உள்ளதால் நான் அதற்குப் பதில் அளிக்கிறேன் என்று கூறி, ரூ. 6 இலட்சம் செலவிடப்பட்டுள்ளதாக விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது தவறு. அதற்காக வருந்துகிறேன்' என்றார்.

## சட்ட மன்றத்தில் 'புரியவில்லை' என்கிறார் நிதி அமைச்சர்

### மொழியில் வடக்கு — தெற்கு இல்லையாம்!

சென்னை, அக். 29—

இந்த மாநில மக்களுக்கு அவமானச் சின்னமாக விளங்கும் 'சென்னை ராஜ்யம்' என்னும் பெயரை மாற்றி 'தமிழ்நாடு' என்ற 'தன்மான'ப் பெயரை இடுவதற்கு மறுக்கும் காங்கிரஸ் ஆட்சியின் தலைவராக உள்ள திரு. சுப்பிரமணியம், அவ்வப்போது, தனக்கும் மற்றவர்களைப்போலத் தமிழ் முன்னேற்றத்தில் அதிக அக்கறை உண்டு என்று பேசிவந்தது வெறும் பித்தலாட்டம் என்று எண்ணக்கூடிய அளவுக்கு, சட்டசபையின் கேள்வி நேரத்தில் தன் உள்ளெண்ணத்தை வெளிப்படுத்திக் கொண்டுள்ளார்.

'மாநில அரசாங்க நிர்வாகத்தைத் தமிழிலேயே நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது' என்றும் தமிழில் நிர்வாகச் சொற்கள் மட்டும் தயாரிக்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார். படிப்படியாக எல்லாம் தமிழ் மயமாக்கப்படுமாம்!

"வடமொழிக் கலப்புச் சொற்கள் அகராதியில் சேர்க்கப்படுமானால், பண்டைத் தமிழ்ச் சொற்கள் மறைந்துபோகும் என்பதை அகராதி தயாரிப்பவர்களுக்கு அரசாங்கம் உணர்த்தியுள்ளதா?"

என்று நமது கழக உறுப்பினர் தோழர் க. அன்பழகன் அவர்கள் கேட்டார்.

"தமிழில் வட மொழிக் கலப்புச் சொற்கள் என்பது, எனக்குப் புரியவில்லை. ஆங்கிலச் சொற்களைக்கூட நாம் ஏற்றுக்கொள்வது கனம் உறுப்பினருக்குத் தெரியும். தயவுசெய்து மொழியில்கூட வடக்கு-தெற்கு பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்"

என்று கல்வி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் பதிலளித்தார்.

இப்போது தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கப்படும் அஞ்சல் அட்டைகளில் உள்ள புரியாத இந்திக்குப் பதில் தமிழில் அச்சடித்து வழங்குவது நல்லதுதான். ஆனால் அது இந்த அரசாங்கத்திற்குத் தொடர்பு கொண்டதல்ல என்று நமது கழக உறுப்பினர் தோழர் எ. கோவிந்தசாமி கேட்டதற்கு அவர் பதிலளித்தார்.

## திருந்திய திருமண அழைப்பு

அன்புடையீர்,

வணக்கம். நிகழும் 1957-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ந்தேதி வெள்ளிக்கிழமை காலை 6-30 மணி அளவில், என் தங்கை மகனும், காலஞ்சென்ற திரு. கோபால ஐயர் குமாரனுமான திருநிறைச் செல்வன் முத்துகிருஷ்ணனுக்கும், காலஞ்சென்ற திரு. கோபால இரத்தினம் ஐயர் குமாரி நிறைநாட்செல்வி இரத்தினம்பாளுக்கும், பொள்ளாச்சி A. C. M. A. மில் ரோடு 1-ம்நெம்பர் இல்லில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும். அதுசமயம் திரு. டி. கே. சீனிவாசன் மணமக்களை வாழ்த்திப் பேசுவார். தாங்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

அன்புள்ள
K. N. ரெங்கசாமி
தலைமையாசிரியர், உயர்நிலைப் பள்ளி, ஸ்ரீரங்கம்

ஸ்ரீரங்கம்,
30-10-57

நம் நாடு
தி. மு. க. தின இதழ்

சென்னை 30—10—57 புதன்

# செஞ்சிலுவை திருப்பணி!

உலக செஞ்சிலுவைச் சங்கத்தின் பத்தொன்பதாவது மாநாடு டெல்லியில் நடந்துகொண்டிருக்கிறது. அம்மாநாட்டில் 83 நாடுகளைச் சேர்ந்த 427 பிரதிநிதிகள் கலந்துகொண்டுள்ளனர்.

மனித நலம் நாடல் ஒன்றுதான் செஞ்சிலுவை சங்கத்தின் உயிர் மூச்சு. நாடு, மொழி, அரசியல், மதம் ஆகிய அனைத்தையும் ஒதுக்கிவிட்டு பணிதாபிமானத்துடன் மனிதனை அணுகி எதிர்பாரா வகையில் அவனுக்கு நேரும் கேடுகளிலிருந்து அவனை மீட்பதுதான் இச்சங்கத்தின் தலையாய பணி.

உலக செஞ்சிலுவைச் சங்கம் தோன்றி, இரண்டாண்டு குறைவாக ஒரு நூற்றாண்டு ஆகிறது. தொண்ணூற்றெட்டு ஆண்டுகட்கு முன்னால் வட இத்தாலியில் மூண்ட போரின் பின் விளைவைத் தோற்றுவாயாகக்கொண்டுதான் செஞ்சிலுவைச் சங்கம் தோன்றியது. ஆண்டு செல்லச்செல்ல, இச்சங்கம் ஆற்றிவந்த தூய பணியின் காரணமாக உலகப்பெருஞ் சங்கமாக இன்று வளர்ந்தோங்கி உள்ளது.

உலக நாடுகள் ஒவ்வொன்றிலும் இன்று செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளைகள் உள்ளன. செஞ்சிலுவைச் சங்கம் எந்த நாட்டைச் சேர்ந்ததாக இருந்த போதிலும், குறிப்பிட்ட ஒரு நாட்டானாக அவனைக் கருதாது உலகவனாகக் கருதி தொண்டாற்றும் பெற்றி இச்சங்கத்தின் தனி உடைமை; அவ்வடிப்படை கண்ணோட்டத்தின் விளைவாகத்தான் இச்சங்கம் புகழ்மணம் வீசி வளர்ந்துகொண்டே வருகிறது.

தொண்ணூற்றெட்டு ஆண்டுகளுக்கு முன்னால் வட இத்தாலியில் பதினைந்து மணி நேர அளவே போர் ஒன்று நிகழ்ந்தது. அப்போரில் ஆயிரக்கணக்கானவர் படுகாயமுற்றனர். கரமிழந்தோர், காலிழந்தோர் ஏராளம். குடிக்க நீர் கிடைக்கப் பெறாது கதறினர். உண்ண உணவின்றித் தவித்தனர். குருதி வெள்ளத்தில் புரண்டு கூக்குரலிட்டுக் கிடந்தனர்.

இவர்கள் கதறலைக் கேட்க ஆளில்லை. ஆறுதல் கூற செவிலிகள் இல்லை. பட்ட காயங்களுக்கு மருந்திட மருத்துவர்கள் இல்லை.

இந்த ஆதரவற்ற அனாதைகளைக் கண்டு உபசரித்து உதவ ஒரு இரக்க சிந்தையர் முன்வந்தார். **யென்றி ட்யூனாண்ட்** என்ற ஒரு நல்லார், தம்மாற்றலுக்குட்பட்ட உதவிகளை இவர்களுக்குச் செய்தார்.

அந்த அளவுடன் அவர் நெஞ்சு அமைதிகொண்டுவிடவில்லை. இப்படி எதிர்காலத்தில் உண்டாகக்கூடிய தொல்லைகளிலிருந்து மனிதர்களுக்கு உதவ சிறந்த ஏற்பாடு ஒன்றை உருவாக்கவேண்டும் என்றும் அவர் தீர்மானித்தார்.

போர்க்களத்தில் அடிபட்டு வாழ்நாள் முழுதும் அவதியுறும் மனிதர்களுக்கு ஆறுதல் தேடுவது தலைசிறந்த அறநெறியாகும் என்பதை அறுபத்துநான்கு நாட்டின் அரசர்களுக்கு எழுதி ஆதரவு திரட்டும் பணியினை மேற்கொண்டார். அதன் பலனாக 1864-ல் பதின்மூன்று நாடுகள் ஒன்று சேர்ந்து, இந்த இலட்சியத்தை ஒப்புக்கொண்டு கையொப்பமிட்ட முதல் ஜினீவா உடன்பாடு உருவாயிற்று.

உடன்பாட்டை உருவாக்கினதுடன் அவர் ஓய்ந்துவிடவில்லை. யென்றிட்யூனண்ட் நாடு நாடாகச்சென்று, உடன்பாட்டின் அடிப்படை இலட்சியத்தைப் பிரசாரம் செய்து, உலக செஞ்சிலுவைச் சங்கத்தைத் தோற்றுவித்தார்.

'களத்தில் காயப்பட்டவர் நடுநிலையாளர்; அவர்களுக்கு எந்த ஒரு நாடும் துன்பமிழைக்கக்கூடாது; அவர்களுக்கு எந்த நாட்டவரும் உதவி புரியலாம்' —இதுதான் முதல் ஜினீவா உடன்பாட்டின் உள்ளடக்கம்.

உலக செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமை அலுவலகம் ஜினீவாவில் உள்ளது. இத்தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு உலக நாடுகள் அனைத்திலும் உள்ள செஞ்சிலுவைச்சங்கங்கள் பணியாற்றி வருகின்றன. இச்சங்கத்தில் தொடர்புகொண்டு ஏறத்தாழ உலகமெங்கும் பத்து கோடி பேர் தூய பணி புரிந்துவருகின்றனர்.

இந்தியத் துணைக்கண்டத்தில் செஞ்சிலுவைச் சங்கம் முதல் முதலாக 1920-ல் துவங்கப்பட்டது. இச்சங்கத்தில் உத்தமர் காந்தியாரும் சேர்ந்து உழைத்திருக்கின்றார்.

களத்தில் காயம்பட்டவர்களுக்கு உதவி புரியும் நல் நோக்கத்துடன் துவங்கிய செஞ்சிலுவைச் சங்கம், தனது பணியினைக் காலப்போக்கில் விரிவுபடுத்திக்கொண்டது. போர் வீரர்கள் பற்றிய விவரங்களை அவர்கள் உறவினர்களுக்கு அறிவிப்பது, கைதிகள் பரிவர்த்தனைக்குத் துணை செய்வது, அகதிகளுக்கு உதவி புரிவது போன்ற பணிகளிலும் செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபடலாயிற்று.

அதுமட்டுமல்லாது, மண்கம்பம், புயல், வெள்ளம், பஞ்சம் முதலியன ஏற்படும் காலங்களில், அவைகளால் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவி செய்வதிலும் செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபடலாயிற்று.

முதல் அணுகுண்டு ஜப்பானில் வெடிக்கப்பட்டது. அதனால் அவதியுற்ற மக்கள் ஏராளம். அவர்கள் அல்லலைக் களைவதிலும் செஞ்சிலுவைச் சங்கம் முன்னணியிலிருந்து புகழ்பெற்று இருக்கிறது.

அணுயுகத்தில் போர்க்களம், பொதுமக்கள் வாழும் இடம் என்ற பாகுபாடு கிடையாது. இப்பொழுது புதிதாக உருவெடுத்திருக்கும் வானவெளிக் கப்பல் ஊடுருவிச் செல்லும் விஞ்ஞான முன்னேற்பு, மேற்குறிப்பிட்ட நிலைமையை மேலும் சீர்குலைக்கக்கூடும். இத்தகு சூழ்நிலையில் 'மக்கள் பாதுகாப்பு' எனும் பொருள்பற்றி டெல்லியில் கூடியுள்ள உலக செஞ்சிலுவை மாநாடு ஆராய முன்வந்துள்ளது வரவேற்கத்தக்கதேயாகும். அதில் வெற்றி ஏற்படவேண்டும் என்பதே நமது விருப்பமாகும்.

மனிதகுலத்திற்கு இத்தகைய தூய பணியாற்றிவரும் செஞ்சிலுவைச் சங்கத்தைத் துவக்கி வைத்த பென்றி ட்யூனண்ட் என்ற சிலர் சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். அவரை நாம் இந்தத் தருணத்தில் நினைவில் கொண்டு, அவர் திருப்பணி வெல்க என வாழ்த்துவோமாக.

# இந்தி ஏகாதிபத்தியத்தை இப்போது முறியடிக்காவிடின்.....!

## திராவிடம் பல நூற்றுண்டுகளுக்கு விடுதலைபெற முடியாது

## பேராற்றல் பெற்றிருந்தும் அடிமைகளாக ஏன் வாழவேண்டும்?

## காங்கிரசாரின் கோழைத்தனம் தமிழர் சமுதாயத்தைக் கேலிக்குரியதாக்குகிறது

### சேலத்தில் ஈ. வெ. கி. சம்பத் சங்கநாதம்

சேலம், அக். 27—

சேலம் போஸ் மைதானத்தில் 20—10—57 மாலை தி. மு. கழகச் சார்பில் ஈ. ஏ. ஆர். இராகவனுதன் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. டெல்லி பாராளுமன்ற உறுப்பினர் ஈ. வெ. கி. சம்பத் இந்தக் கூட்டத்தில் பேசினார்.

'தமிழ் நாட்டில் புகுத்தப்படவிருக்கும் இந்தியைத் தமிழ் மக்கள் அனைவரும் ஒருமுகப்பட்டு எதிர்த்து விரட்டவேண்டும்' என்று, தோழர்கள் சிற்றுளி-சுப்பிரமணியம், ஈ. ஆர். கிருஷ்ணன் ஆகியவர்கள் பேசினார்.

பின்னர் பலத்த கைதட்டுதலுக்கிடையே தோழர் ஈ.வெ.கி. சம்பத் பேச எழுந்தார்.

டெல்லிப் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபின் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் இப்பொழுதுதான் முதல்தடவையாக சேலம் வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தி. மு. கழகக் கிளைகளின் சார்பிலும், மற்றும், தொழிலாளர்கள் சார்பிலும் தோழர் சம்பத் அவர்களுக்கு ஏராளமான மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

சம்பத் அவர்கள் பேச எழுந்தபோது மழை ஆரம்பித்ததையும் பொருட்படுத்தாது கூட்டத்தில் இருந்த மக்கள் சம்பத் அவர்களின் பேச்சைக்கேட்க ஆவலோடு காத்திருந்தனர்.

தோழர் சம்பத் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்தியைக் கற்றுக்கொண்டால்தான் வேலை' என்ற நிலையை வடநாட்டு ஏகாதிபத்திய சர்க்கார் உண்டுபண்ணுகிறார்கள். இந்தி மொழி ஆட்சி மொழியாக்கப்பட்டுவிட்டால், தென்னாட்டு மக்கள்தான் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

"தென்னாட்டு மக்களிடத்தில் திறமைக்குப் பஞ்சமில்லை. நேருவின் அயல்நாட்டு விவகார இலாகாவில் தென்னாட்டுக்காரர்கள்தான் இருந்து பணியாற்றிவருகிறார்கள். டெல்லியில் உள்ள சர்க்கார் காரியாலயங்களில் தென்னாட்டைச் சேர்ந்தவர்கள்தான் குமாஸ்தாக்களாகவும், மற்றும் அதிகாரிகளாகவும் இருந்து பணியாற்றி வருகிறார்கள். டெல்லியில் உள்ள மத்தியப் போரசின் காரியாலயங்களில் வேலை செய்யும் தென்னாட்டைச் சேர்ந்தவர்கள் ஒன்றுபட்டு, தாங்கள் வேலை செய்ய முடியாது என்று மறுத்து தங்கள் பேனா ஓட்டத்தை நிறுத்தி விட்டால் மத்தியப் போரசின் வேலைகளே ஸ்தம்பித்துவிடும்.

"இவ்வளவு திறமை இருந்தும் என் தென்னாட்டு மக்கள் ஒன்றுபடாமல், மற்றவர்களுக்கு இன்னும் அடிமைகளாக இருக்கவேண்டும் என்றுதான் தெரியவில்லை. தென்னாட்டு மக்கள் அனைவரிடத்திலும் — வடநாட்டு ஏகாதிபத்தியத்தினிடமும் அடிமைகளாக இருக்கிறோம் என்ற உணர்ச்சி இன்னும் வரவில்லை,

"அலாவுதீனும் அற்புத விளக்கும்—என்ற கதையை நீங்கள் படித்திருப்பீர்கள்; அந்தக் கதையில், விவேகமில்லாத சின்னஞ்சிறுவன் ஒருவிளக்கைத் தேய்ப்பான்; உடனே வானைத்தொடும் அளவில் ஒரு பெரிய உருவம் தோன்றும்; அந்த உருவம் பார்ப்பதற்கே பயங்கரமாக இருக்கும்; அந்தச் சிறுவன் இடும் கட்டளைக்குப் பணிந்து அந்த உருவம் நொடிப்பொழுதில் மாடமாளிகை முதலியவைகளை அமைத்துக் கொடுக்கும். அந்தக் கதையில் பரிதாபகரமான நிகழ்ச்சி என்னவென்றால், அதிக சக்திகளையுடைய பெரும் பூதம், ஒரு சிறுவனின் கட்டளைக்குப் பணியவேண்டியது ஏன் என்றுதான் தோன்றுகிறது.

"அதேபோல், தென்னாட்டு மக்கள், அலாவுதீன் கதையில் வரும் பூதத்தைப்போல் அதிகத் திறமையுடையவர்களாக இருந்தபோதிலும் — கதையில் வரும் விவேகமில்லாத சிறுவனுக்கு ஒப்பான—வடநாட்டு ஏகாதிபத்தியத்தினிடம் ஏன் அடிமைகளாக இருக்கவேண்டும்?

"தென்னாட்டு மக்கள் சிறந்த எஞ்சினியர்களாகவும், சிறந்த விஞ்ஞானிகளாகவும் இருக்கிறார்கள். இவ்வளவு திறன் இருந்தும், வடநாட்டு ஏகாதிபத்தியத்தை உதறித்தள்ளி வாழவேண்டும் என்றநிலை இன்னும் ஏற்படாததைக் கண்டு வருந்தவேண்டியுள்ளது.

"நம் கால்களை எவனும் கட்டி வைத்திருக்கவில்லை. நம உள்ளத்தில் உள்ள கோழைத்தனம்தான் நாம் இன்னும் வடநாட்டு இந்தி வெறியர்களுக்கு அடிமைகளாக இருப்பதற்குக் காரணம். சமுதாயத்தில் நம்முடைய சுயமரியாதையை நிலைநாட்ட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டு, அரசியலில் தலைதூக்கும் நாள் என்றைக்கு வருமோ, அன்றைக்குத்தான் நாம் சுதந்தர மனிதர்களாக வாழமுடியும்; அதுவரை நாம், ஆப்பிரிக்கா முதலிய நாடுகளின் சுதந்தரப் போராட்டங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

"நான் டெல்லிக்குச் சென்று அங்குள்ள நிலைகளைக் கண்டபின், மனங்குமுறி இவற்றைச் சொல்லுகிறேன். இதுவரை நமக்குத் தெரியாமல் இருந்த பல பயங்கரங்களை டெல்லியில் கண்டேன். டெல்லி ஆதிக்கம், உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார் ஆகிய மூன்று மாநிலங்களின் பிடிப்பில் இருகிக்றது. அந்த மூன்று மாநிலங்களைச் சேர்ந்த சுமார் 230 பேர் டெல்லிப் பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இந்த மூன்று மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் இந்தியைப் பேசுகிறார்கள். இந்தியை ஆட்சிமொழியாகக் கொண்டுவர வேண்டும் என்பதிலும் இந்த மூன்று மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் மிகவும் தீவிரமாக இருக்கிறார்கள். அந்த மூன்று மாநிலங்களைச் சேர்ந்தவர்களோடு குசராத்தி, இராஜஸ்தான் மக்களும் ஒன்றாகச் சேருகிறார்கள். ஆகவே, அந்த 5 பிரதேச மக்களிடத்தில் ஒரே இனஉணர்ச்சி ஏற்படுகிறது. தங்கள் கையில் கிடைத்திருக்கும் அதிகாரத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அந்த 5 மாநிலங்களைச் சேர்ந்தவர்களிடத்தில் ஏற்படுகிறது. இந்த 5 மாநிலங்களைத் தவிர, மற்ற மாநிலங்களைச் சேர்ந்த மக்களிடம்—அதாவது, வங்காளம், தமிழ், தெலுங்கு, மலையாளம் முதலிய மாநிலங்களைச் சேர்ந்தவர்களிடம்—ஒற்றுமை ஏற்பட வழியில்லாமல் சிதறிப்போய் இருக்கிறார்கள்.

"இந்தி கூடாது என்று தி. மு. கழகச் சார்பில் நான் டெல்லி பாராளுமன்றத்தில் பேசினால், 'இந்தியே வேண்டாம் என்றா கூறுகிறீர்கள்' என்று என்னைக் கேட்கிறார்கள். இந்திபற்றி நாம் கொண்டிருக்கும் கருத்து அந்த அளவுக்குத்தான் அவர்களுக்குத் தெரிந்து உள்ளது.

"1937-ல், தமிழ் நாட்டில் இந்தி புகுத்தப்பட்டது. அதை எதிர்த்துத் தமிழ் மக்கள் போராட்டம் நடத்தினார்கள்; தாய்மார்களும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறை சென்றார்கள்; ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் அந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறை சென்றார்கள். மீண்டும் 1957-ல் இந்தி வேண்டாம் என்று நாம் கூறுகிறோம்.

"ஆனால் நம்முடைய இந்தி எதிர்ப்புக் கருத்துக்கள் வடநாட்டில் உள்ளவர்களுக்குச் சரியாகத் தெரியவில்லை. சரியாகத் தெரியாததற்குக் காரணம், தமிழ்நாட்டில் உள்ள பத்திரிகைகள்தான்; இங்குள்ள பத்திரிகைகள், சர்க்காரின் தயவை நம்பி வாழ்கின்றன. பத்திரிகைகளுக்கு சர்க்கார் விளம்பரம் கொடுக்கிறார்கள். இங்குள்ள பத்திரிகைகளின் போஷகராக சர்க்கார் இருந்துவருகின்றனர். அந்தப் பத்திரிகைகளுக்கு மற்ற கம்பெனிகளையும் விளம்பரம் கொடுக்கும்படி சர்க்கார் கூறுகிறது. சர்க்கார் விளம்பரமில்லாமல் இங்குள்ள பத்திரிகைகள் உயிர் வாழமுடியாது. சர்க்கார் தயவை நாடி வாழும் பத்திரிகைகள் சர்க்காருக்கு விரும்பாத செய்திகளைப் பிரசுரிப்பதில்லை. நம்முடைய போராட்டச் செய்திகளுக்கு இங்குள்ள பத்திரிகைகள் அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

"அக்டோபர் 13-ந் தேதி தமிழ் நாடெங்கிலும் இந்தி எதிர்ப்பு நாளாக தி. மு. கழகம் கொண்டாடியது. இந்தியை எதிர்க்க வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தி அண்ணா, நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, அன்பழகன், மற்றும் பலரும் தமிழ்நாட்டில் பல இடங்களில் பேசினார்கள். ஆனால் இந்த நிகழ்ச்சிகள் பத்திரிகைகளில் அங்கொன்றும், இங்கொன்றுமாக நான்கைந்து வரிகளில்—முக்கியத்வம் கொடுக்கப்படாமல்பிரசுரிக்கப்பட்டிருந்தன. இம்மாதிரி இங்குள்ள பத்திரிகைகள் சர்க்காரின் தயவை நாடி வாழ்வதால் நம்முடைய செய்திகளை இருட்டடிப்பு செய்கின்றன.

"மக்கள் ஆதரவு இல்லாத யாரோ ஒருசிலர் எங்காவது

(4-ம் பக்கம் பார்க்க)

# சென்னை 5-வது வட்ட தி.மு.க.-இளங்கோ படிப்பகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம்

## அண்ணா, என்.வி. நடராசன், ஏ. கோவிந்தசாமி, க. அறிவழகன் கலந்துகொண்டனர்

சென்னை, அக். 28—

சென்னை 5-வது வட்ட தி. மு. கழக—இளங்கோ படிப்பகத் துவக்கவிழாப் பொதுக்கூட்டம் 25—10—57 மாலை 6 மணிக்கு கொருக்குப்பேட்டையில் நடைபெற்றது; இயக்கப் பண்கள் பாடப்பட்டபின் கூட்டம் துவங்கியது.

கூட்டத்துக்குத் தலைமை வகிக்கவிருந்த துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் வரும்வரை தோழர் சேதுராஜ் தலைமை வகித்துக் கூட்டத்தை நடத்தினார்.

தோழர் பி. எம். கருணாகரன் இயக்கக் கொள்கைகளை விளக்கியும், இந்தித் திணிப்பைக் கண்டித்தும் தெலுங்கில் பேசினார்.

அடுத்து, பம்பாய் தி. மு. கழகச் செயலாளரான தோழர் எஸ். தியாகராசன் பம்பாய்வாழ் தமிழ் மக்களின் நிலை குறித்தும், அங்கு நம் கழகக் கொள்கைகள் வளர்ந்து வரும் விதம் குறித்தும் சிறிது நேரம் பேசினார்.

### என். வி. நடராசன்

பின்னர் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கூட்டத் தலைமையை ஏற்று உரை நிகழ்த்தினார்.

அவர் தம் உரையில் குறிப்பிட்டதாவது :—

"நம்முடைய பணிகளைச் சந்தேகித்தவர்களும், எதிர்த்தவர்களும் இன்று ஆதரிக்கும் நிலையைக் காண்கிறோம். இந்த நாட்டில் 25 ஆண்டுகளாக ஊறிவந்த கொள்கை இன்று மாற்று எண்ணங்கொண்டவர்களாலும் ஆதரிக்கப்படுவதைக் கண்டு நாமெல்லாம் பூரிப்பும் மகிழ்ச்சியும் அடைகிறோம்,

"இன்றைக்கு தி. மு. கழகம் மகத்தானதொரு சக்தியாக வளர்ந்துவருகிறது. அதற்கு இளங்கோ அடிகள் பேரால் நிறுவப்பட்டுள்ள இப்படிப்பகமும் ஆதவாக துணைநிற்குமென்று நம்புகிறேன்.

"இந்தியைக் கட்டாயமாக—மக்கள் கருத்துக்கு மாறாகத் திணிக்க மாட்டோம் என்று அவ்வப்போது தெரிவித்துவருகிறார் பண்டித நேரு. அவரது கருத்துக்கு மாறாக இந்தி இப்பொழுது பகிரங்கமாகவும் மறைமுகமாகவும் புகுத்தப்படுகிறது.

"இதை நாம் சொன்னபோது நம்மைப் பிற்போக்குவாதிகள் என்றார்கள். 1937-ல் தாளமுத்து நடராசனை இந்திக்குப் பலி வாங்கிய ஆச்சாரியாரே இன்று நம் கருத்தைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார். இன்று இந்தித் திணிப்பை எதிர்க்கின்றவர்களெல்லாம் இறுதிவரை நமக்குப் பக்கத் துணையாக இருந்து வர வேண்டும்.

"இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமா?—என்ற முழக்கத்தை நாம் மீண்டும் இந்தி வெறி பிடித்த இந்தியப் பேரரசுக்கு உணர்த்தியாக வேண்டும்.

"அந்தந்த மாநிலத்தில் அந்தந்தத் தாய்மொழியே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும். எங்கோ உள்ள 4—5 பேர் போடுகிற உத்தரவை நாம் ஏற்க முடியாது. தன்மானத் திராவிடர்களாகிய நீங்கள் இந்தித் திணிப்புக்கு இடம் கொடுக்கக்கூடாது. வங்காளிகள் — மராட்டியர்களைப் போல மொழிப் பற்றும் இன உணர்ச்சியும் இங்கு ஏற்படவேண்டும்.

"தொழிலாளரானாலும் சரி, பாட்டாளியானாலும் சரி, ஆசிரியரானாலும், அரசாங்க உத்தியோகத்தி லிருப்பவரானாலும் சரி, யாராயிருந்தாலும் அவர்களது வாழ்வுப் பிரச்சினை நிரந்தரமாகத் தீர்க்கப்படுவதற்கான அருமருந்து 'திராவிடநாடு திராவிடருக்கே' என்னும் மூல முழக்கம்தான். அதற்கு நாம், கூட்டு சக்தியுடன் பணியாற்றி, இப்பொழுதுள்ளதைவிட இன்னும் கட்டுக்கோப்பாக நம்மை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

"எங்களை அரசாங்கம் வலுவில் போராட்டத்தில் இழுத்துவிடுமானால் நாங்கள் போராட்டத்தில் ஈடுபடுவோம். பொதுமக்களாகிய நீங்கள் வர வேண்டியதில்லை; எங்களை வழியனுப்பி வையுங்கள். அதன்பின், அவசியமேற்பட்டால்—விரும்பினால் நீங்களும் களத்துக்கு வாருங்கள்.

"நாம் யார் என்று எவரேனும் கேட்டால்—'தமிழன்'—'திராவிடன்' என்று கூறக்கூடிய அளவுக்கு உணர்ச்சி ஒவ்வொருவருக்கும் ஏற்பட வேண்டும்.

"இன்றைக்குக் காங்கிரஸ் கொஞ்சம் கொஞ்சமாகச் சரிந்து வருகிறது. அண்மையில் நேருவின் சொந்த மாநிலமான உத்தரப் பிரதேசத்தில் நடந்த நகரசபைத் தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வியடைந்திருக்கிறது.

"எனவே, வெறி பிடித்த வடநாட்டு ஆதிபத்தியத்தை ஒழித்துக்கட்ட—அரசியல் வெறிபிடித்தவர்களின் ஆணவத்தை அடக்க நீங்களெல்லாம ஆதரவு தரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்."

### க. அறிவழகன்

அடுத்து தோழர் க. அறிவழகன் பேசுகையில், இளங்கோவின் பேரால் நிறுவப்பட்டுள்ள இந்த இளங்கோ படிப்பகம், பண்டைத் தமிழரின் வீர வரலாற்றை நினைவுபடுத்துவதாகக் கூறி, வடநாடு சென்று கனக—விசயரின் தலையில் கல் சுமக்க வைத்த சேரன்—செங்குட்டுவனின் தம்பியாகிய இளங்கோவைப்போல, அண்ணாவுக்கு இருக்கும் ஆயிரமாயிரம தம்பிமார்கள் — இளங்கோக்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடத் தயார் தயார் என்று கூறினார்.

"இளங்கோ காலத்தில் நாடு சுதந்தரமாக — கலை, நாகரீக, வாணிபத் துறையில் உலகுக்கு வழிகாட்டியாக இருந்தது; ஆனால் இன்று, நம மொழியைச் சிதைப்பதற்கான காரியங்களை வடநாட்டினர் செய்துகொண்டிருக்கின்றனர்" என்று கூறி, இந்தி பற்றி நிதியமைச்சர் சுப்பிரமணியம் 1955-ல் 'ஆனந்தவிகடன்' மலரில் எழுதியுள்ள கட்டுரையிலிருந்து சில புள்ளிவிவரங்களை எடுத்துக்காட்டி, இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பேசினார்.

### ஏ. கோவிந்தசாமி

அடுத்துத் தோழர் ஏ.கோவிந்தசாமி எம்.எல்.ஏ. அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"புலவர் குழந்தையம்மாள் என்பவர், சட்டசபையில் 'இந்தித் திணிப்பு கூடாது' என்று பேசிய போது, 'இந்தி வேண்டாம் என்று கூறுபவர்கள் தமிழுக்குத் துரோகம் செய்பவர்கள் ஆவார்கள்' என்று கூறி குழந்தையம்மாளைக் கண்டிக்கும் வகையில், பேசிய அதே சுப்பிரமணியம்தான் இன்று, 'இந்தியைத் திணிக்கவிட மாட்டோம்' என்கிறார்.

"எப்பொழுதும் அவர் தனது குருநாதரின் வழிதான் வந்து சேருவார் என்பது நமக்குத் தெரியும். எனவே, 'இந்தித் திணிப்பும் வராது; நமக்கும் அதை எதிர்க்கும்வேலையிருக்காது' என்று நம்பலாம்.

"இதேபோல்தான் திரு. சுப்பிரமணியம் 'சுதந்தரப் பயணம்' சினிமாப் படத்தில் தென்னாட்டினர் புறக்கணிக்கப்பட்டதைக்கண்டதும், நேருவையே 'சரித்திரம் தெரியாதவர்' என்று துணிந்து கண்டித்திருக்கிறார்."

### அண்ணா

இறுதியாக அண்ணா அவர்கள் பேசினார்கள்; (பேச்சு முன்னரே வெளியிடப்பட்டுள்ளது.) பேச எழுந்ததும் அண்ணா அவர்களுக்குப் பல மன்றங்கள்—கழகங்கள் சார்பில் கைத்தறி ஆடைகளும் மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

கூட்டத்தில் அண்ணா அவர்களால், தோழர் கன்னையா மகனுக்கு 'மதியழகன்' என்றும், தோழர் இளங்கோ மகனுக்கு 'அன்பழகன்' என்றும், தோழர் சேதுராமன் மகனுக்கு 'செங்குட்டுவன்' என்றும், தோழர் சாமிராஜ் பெண்மகவுக்கு 'செந்தாமரை' என்றும், தோழர் செல்லப்பன் மகனுக்கு 'வீரமணி' என்றும், தோழர் இராஜு—வின் குழந்தைக்குச் 'செல்வம்' என்றும், மற்றொரு குழந்தைக்குப் 'பாண்டியன்' என்றும் பெயரிடப்பட்டது.

# மயிலையில் நபிகள் நாயகம் பிறந்த நாள் விழா

## அண்ணா கலந்து கொண்டார்

சென்னை, அக். 28—

மயிலைமஜீத் படிப்பகத்தின் சார்பில் 26—10—57 மாலை மிகச் சிறப்புற நபிகள் நாயகம் பிறந்த நாள் விழா கொண்டாடப்பெற்றது.

அலங்கரிக்கப்பட்ட மேடையில் தோழர் எம். எஸ். கமால்பாட்சா தலைமையில் விழா துவங்கியது.

முதலில் சேலம் சீனிவாசன் இன்னிசை வழங்கினார்.

44-வது வட்ட தி. மு. க. செயலாளர் பி. இராமசாமி, தோழர் எம். எஸ். அப்துல்காதர் பி. எஸ்சி., தோழர் நீலநாராயணன் ஆகியோர் நபிகள் நாயகத்தின் அரிய போதனைகளையும், இஸ்லாத்திலுள்ள உயரிய கொள்கைகளையும் விளக்கிப் பேசினார்கள்.

இறுதியாக அண்ணா அவர்கள் பேசினார்கள் (பேச்சு விவரம் பின்னர் வரும்); பேச எழுந்ததும், அண்ணா அவர்களுக்கு 44-வது வட்ட தி. மு. கழகம், மயிலை கே. வி. கே. சாமி மன்றம், அறிவு வளர்ச்சி மன்றம், மஜீத் படிப்பகம், 45-வது வட்ட அண்ணா படிப்பகம், மற்றும் பலர் சார்பில் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

மயிலை என். எஸ். கே. மாணவர் கால்பந்து கழகத்தின் சார்பில் 101 காசு அன்பளிப்பாக அளிக்கப்பட்டது.

தோழர் ஏழுமலை அவர்களின் ஆண் குழந்தைக்குப் 'பாண்டியன்' என அண்ணா அவர்களால் பெயரிடப்பட்டது.

மழை விடாமல் தூறிக்கொண்டிருந்தும், கூட்டத்தினர் இறுதி வரை கலையாமல், அமைதியாக இருந்து அண்ணா அவர்களின் பேச்சைக் கேட்டனர்.

நன்றிகூறலுடன் விழா முடிவுற்றது.

# சென்னை 37-வது வட்ட தி. மு. கழக 7-ம் ஆண்டு விழாப் பொதுக்கூட்டம்

## மு. கருணாநிதி, கண்ணதாசன் கலந்துகொண்டனர்

சென்னை, அக். 28—

சென்னை 37-வது வட்ட தி.மு. கழக ஏழாம் ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் 23—10—57 மாலை, இராயப்பேட்டை, சீனிவாசபுரம் 2-ம் தெருவில் தோழர் டி. என். கிருஷ்ணன் தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

தோழர் இராதாமாணிக்கம் இன்னிசைக்குப்பின் தோழர் கதிரவன் சிறிது நேரம் பேசினார்.

அடுத்து, தோழர் கண்ணதாசன் பேசினார்; அவர் பேசுகையில், டெல்லி ஆதிக்கத்தின் இந்தித் திணிப்பு வெறி குறித்தும், நம் கொள்கைகளை இருட்டடிப்புச் செய்துவரும் பத்திரிகைகளின் போக்கு பற்றியும் குறிப்பிட்டுவிட்டு, பாராளுமன்றத்தில் இந்தித் திணிப்பை எதிர்த்து தோழர் சம்பத் அவர்கள் முழங்கியதைச் சுட்டிக் காட்டினார். '400-க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ள பாராளுமன்றத்தில் உள்ள இரண்டே தி. மு. கழக உறுப்பினர்களில் ஒரே ஒருவர் பேசிய ஒரே பேச்சு இந்நாட்டு ஏகாதிபத்தியவாதிகளை அதிரச் செய்திருக்கிறது," என்று அவர் கூறினார். மேலும் அவர் பேசுகையில், இந்தித் திணிப்பால் வரும் கேட்டினையும், அதனை எதிர்க்க வேண்டிய அவசியத்தையும் எடுத்து விளக்கினார்.

பின்னர், தூத்துக்குடி தாளமுத்து, கலைவாணர் என். எஸ். கே., கவர்னர் ஏ. ஜே. ஜான், கண்ணதாசனின் அன்னையார், பொதுச்செயலாளர் நெடுஞ்செழியனின் மாமனார் எஸ். இராமலிங்கனார், மதியழகனின் தமையனார் கே. ஏ. அருணாசலம் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும, வட்டத்தில உள்ள சுகாதாரக் குறைபாடுகளை நீக்க வேண்டுமென்று கோரி 19—5—57-ல் அதற்கென தி.மு. கழகச் சார்பில் ஒரு குழு ஏற்படுத்தி, வட்ட நகரசபை உறுப்பினர் கமலக்கண்ணன் அவர்களிடம் எடுத்துக் கூறி 5 மாதங்களாகியும் இன்னும் அதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமை குறித்து வருந்தியும் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இறுதியாகத் தோழர் மு. கருணாநிதி அவர்கள் பேசுகையில், திராவிட நாட்டின் பிரச்சினையை, திராவிட நாட்டிலிருந்து ஆராயும்-திராவிட நாட்டிலேயே தலைமையையுடைய ஒரே கட்சி தி. மு. கழகம்தான் என்பதையும், மற்றவை அனைத்தும், அகில இந்திய—அகில உலகக் கண்ணோட்டத்தில் பிரச்சினையை ஆராய்பவை என்றும் குறிப்பிட்டுவிட்டு, திராவிட நாடு பிரியவேண்டிய அவசர—அவசியத்தை விளக்கினார். திராவிட நாட்டுப் பிரிவினைக்கு இப்பொழுது நல்ல சூழ்நிலை—அறிகுறி தோன்றி வருகிறது என்றார்.

இன்றைய அரசியல் நிலை குறித்து விளக்குகையில், டி. டி. கிருஷ்ணமாச்சாரி அமெரிக்காவில் நேருவின் வெளிநாட்டுக் கொள்கைக்கு மாறாகப் பேசியதைச் சுட்டிக் காட்டினார்.

பேச்சாளர்களுக்குப் பல மன்றங்கள் சார்பில் கைத்தறியாடைகள் அணிவிக்கப்பட்டன.

நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

# மைசூரின் உணவு நிலைமை

## முதலமைச்சரின் சோகக் குரல்

பெங்களூர், அக். 29—

மைசூர் முதலமைச்சர் திரு. நிசலிங்கப்பா செய்தி நிருபர்களிடம் மைசூரின் உணவு நிலைமை குறித்துத் தெரிவித்துள்ள கருத்து வருமாறு,—

"பழைய மைசூரில் கேழ்வரகே முக்கிய உணவுப் பொருளாகும். சரியான மழையின்மையால் கேழ்வரகின் நிலையும், அரிசியின் நிலையும் திருப்திகரமாக இல்லை. ஆனால், அண்மையில் மழை பெய்துள்ளதால் நிலைமை ஓரளவு சீரடையலாம்.

ஒரிசாவிலிருந்து கேழ்வரகுதருவிக்க அரசாங்கம் செய்த முயற்சி பலிக்கவில்லை. இதனால், மக்கள் கோதுமையையோ, அன்றி சோளத்தையோ பயன்படுத்த வேண்டியுள்ளது. மாநிலத்தில் சோளம் விளையும் பகுதிகளில் போதிய மழை பெய்தால் அறுவடைக்குப்பின் நிலைமை சீரடையலாம்.

அரிசி ஏற்றுமதி செய்யப்படாதிருந்தால் டிசம்பர் அறுவடைக்குப்பின் நிலைமை இப்போதுள்ளதுபோல அவ்வளவு மோசமாக இராது.

அரிசி ஆலைக்காரர்களும், உற்பத்தியாளரும் வெளியிடங்களுக்கு அரிசி ஏற்றுமதி செய்யக்கூடாது.

மத்திய அரசாங்க உதவியுடன் ஆந்திராவிலிருந்தும் நெல் தருவிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்து வருகிறது.

# தீ. ப. நாதன் மறைவு

நீண்ட நாளைய கழகத் தோழரும் சிறந்த தொண்டரும், எழுத்தாளருமான மாயவரம் தீ. ப. நாதன் (பண்டரிநாதன்) அவர்கள் 23—10—57ல்இயற்கையெய்தினார் என்ற செய்தி நம்மை மிகவும் வருத்துகிறது.

தோழர் நாதன் இறக்கும்வரை தி. மு. கழக உறுப்பினராக இருந்து இயக்க வளர்ச்சிக்காகப் பல இன்னல்களையும் ஏற்றுப் பணியாற்றிய இளைஞராவார். கழகத்தைத் தன்னுயிராகக் கருதிப் பாடுபட்டவர். அவரது மறைவு கழகத்திற்கும், குறிப்பாக மாயூரம் நகரத்திற்கும் பேரிழப்பாகும்.

தனது இளம் மனைவியையும் இரு பெண்கள்-ஒரு மகனையும் விட்டு அவர் பிரிந்தார். அவருக்கு வயது 33.

அவரது பிரிவால் துயருறும் மனைவி மக்களுக்கும், நண்பர்களுக்கும், கழகத் தோழர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். —(ஆ-ர்.)

★

## அனுதாபம்

சென்னை 20-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர் தோழர் வி. திருவேங்கடம் அவர்களின் புதல்வி தாமரைச்செல்வி 2—10—57-ல் இயற்கை எய்தியமை குறித்து கிளைக்கழகம் தனது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

* * *

சேலம் நகர தி. மு. க. பொருளாளர் தோழர் எஸ். மெய்யப்பன் அவர்களின் பாட்டியார் விசாலாட்சி அம்மையார் 14—10—57-ல் இயற்கை எய்திவிட்டதை வருத்தத்துடன் அறிவிப்பதுடன் அன்னார் குடும்பத்திற்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

* * *

சென்னை 12-வதுவட்ட தி. மு. கழகச் செற்குழு உறுப்பினர் தோழர் முடியரசு (கோபால்) அவர்கள் டைபாய்டு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு 21—10—57 இரவு 7-30 மணிக்கு இயற்கை எய்தினார்; அன்னார் குடும்பத்தாருக்கும், உறவினர்களுக்கும் மேற்படிவட்ட தி. மு. க. சார்பில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

# ஆளும் கட்சி திட்டமிட்டு கலவரத்தைத் தூண்டியது

## சென்னை அமைச்சரவை மீது நம்பிக்கையில்லை

சென்னை, அக். 29—

"கலவரம் நடைபெற்ற பகுதியில், பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் உட்பட காங்கிரஸ் தலைவர்களின் பேச்சுக்களும், செயல்களுமே அங்கு ஏற்பட்ட பயங்கர சூழ்நிலைக்கு அதிகக் காரணமாகும். நடைபெற்றது சாதிச் சண்டையல்ல; காங்கிரஸ் செல்வாக்கை உருவாக்கிக்கொள்ள காங்கிரஸ் அமைச்சரவை தாழ்த்தப்பட்ட மக்களைக் கருவியாகப் பயன்படுத்திக்கொண்டு தேவர்களுக்கும்—தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் தீங்கிழைத்துள்ளது. சட்டபூர்வமான முழு விசாரணைக்குப் பகிரங்கமாக ஏற்பாடு செய்வதன் மூலம்தான் உண்மை வெளிப்படும். அதனால்தான் எதிர்க்கட்சிகள், 'நீதிபதிகளை நியமித்து வெளிப்படையாக நிலைமையை விசாரிக்க வேண்டும்' என்று வற்புறுத்துகின்றன. குட்டு வெளிப்பட்டுவிடுமோ என்ற குற்ற உள்ளம் அரசாங்கத்திற்கு இருப்பதையே முழு விசாரணையை அது தட்டிக்கழிப்பது எடுத்துக்காட்டுகிறது"

—என்று சென்னை சட்டசபையில் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் திரு. கல்யாணசுந்தரம் 'காமராசர் தலைமையில் இயங்கும் அமைச்சரவை மீது நம்பிக்கையில்லை' என்ற தீர்மானத்தை முன்மொழிந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், கலவரப் பகுதியில் போலீசார் சென்றது அமைதியை உருவாக்க அல்ல என்றும், மேலும் கலவரத்தை அதிகப்படுத்தவே முயன்றுள்ளது என்றும் கருதவேண்டியிருக்கிறது என்றும் கூறினார்.

எதிர்க் கட்சிகளை ஒடுக்க ஆளும் கட்சியினர் சாதி வெறியைத் தூண்டிவிடுவதை அவர் கண்டித்தார்.

"மாற்றுக் கட்சிகளுடன் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு எத்தகைய கருத்து வேறுபாடுகள் இருப்பினும், அரசாங்கம் நெறி தவறி அநீதி இழைக்கும்போது கம்யூனிஸ்டுக் கட்சி சும்மா இருக்காது" என்று அவர் அறிவித்து, 'அரசாங்க அதிகாரி திரு. வெங்கடேசுவரன் அளித்த விசாரணை முடிவுகள் அரசாங்கத்திற்குச் சாதகமாகத் தயாரிக்கப்பட்டவை' என்று விளக்கினார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை (கம்யூனல் ஜி. ஓ.) நான் ஆதரிக்கிறேன். எல்லோருக்கும் வேலை கிடைக்கும்வரை மக்கள் தொகைக்கு ஏற்றவாறு எல்லா வகுப்புகளும் தங்கள் பங்கைப் பெற வேண்டும் என்று நான் கருதுகிறேன். ஆனால் இப்போது பதவி உயர்வுகள் சாதி அடிப்படையில் நடைபெறுகிறது. இது சனநாயகத்திற்கு மாறுபட்டதாகும்."

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வழிமொழிந்து பேசுகையில் முன்னணிக் கட்சியின் உறுப்பினர் திரு. சசிவர்ண தேவர், காங்கிரஸ் தலைவர்கள் திட்டமிட்டு இழைத்த சதியே நடைபெற்ற கலவரத்திற்கு அடிப்படைக் காரணம் என்று மேற்கோள்கள் காட்டிப் பேசினார்.

இந்தத் தீர்மானத்தை ஆதரித்து சோஷலிஸ்டுக் கட்சி உறுப்பினர் பேசுகையில், ஆட்சியாளர் போற்றும் விநோபா போன்றவர்கள் கூட, நடைபெற்ற கலவரத்திற்கு சாதி உணர்ச்சி காரணமல்ல என்றும், அரசியல் ஆதிக்க உணர்ச்சியே காரணம் என்றும் அறிவித்ததைச் சுட்டிக்காட்டினார்.

தீர்மானத்தை ஆதரித்து காங்கிரஸ் குடியரசுக் கட்சி உறுப்பினர் திரு. ஆதிமூலம் பேசுகையில் 'மக்கள் உண்மையறிய நீதி விசாரணை வேண்டும்' என்று வற்புறுத்தினார்.

தீர்மானத்தை எதிர்த்துப் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு. சீனிவாச அய்யர், முத்துராமலிங்கத் தேவரின் செல்வாக்கைப்பற்றிக் கூறப்படும் கருத்துக்களைத் தொகுத்துக் கூறி ஆளும் கட்சியினர் செய்கைக்கு நியாயம் கற்பித்தார்.

தீர்மானத்தை ஆதரித்து மக்கள் சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் திரு. சின்னதுரை பேசுகையில், வெறும் மிருகத்தனமான பெரும்பான்மை, ஆளும் கட்சியினர் நெறி தவறவும், நேர்மையை விட்டுவிடவும் பயன்படக்கூடாது என்று குறிப்பிட்டுவிட்டு, 'மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் அரசாங்கம் பாதுகாப்பளிக்கத் தவறிவிட்டது' என்று குற்றஞ்சாட்டினார்.

# சேலத்தில் ஈ.வெ.கி. சம்பத் முழக்கம்

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஒரு மூலையில் பேசினால் அவற்றைப் பத்தி பத்தியாக இங்குள்ள பத்திரிகைகள் வெளியிடுகின்றன. தேர்தலுக்குமுன் நாங்கள் 'என் எங்கள் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை?' என்று கேட்டதற்கு, 'நீங்கள் எம்.எல்.ஏ.-க்கள் எம். பி.-க்களாக இருந்தால் உங்கள் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுப்போம்' என்று பத்திரிகைக்காரர்கள் கூறினார்கள். நாங்களும் எம். எல். ஏ.-க்களும் எம். பி.-க்களுமாக சிலர் பதவி ஏற்றிருக்கிறோம். அப்படியிருந்தும், கழகச் செய்திகளுக்கு பத்திரிகைகளில் முக்கியத்துவம் கொடுக்க மறுக்கிறார்கள்.

"டெல்லிப் பாராளுமன்றத்தில், 'இந்தி வேண்டாம்' என்று நான் பேசிய பிறகு, அங்குள்ளவர்கள் நம் பேச்சை மிக ஆச்சரியத்தோடு கேட்டார்கள். அந்த அளவுக்கு நம்மைப் பற்றிய செய்தி அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது! ஜனநாயகக் குடியாசுக் கோட்டம் எகாதிபத்தியக் கோட்டமாக இருப்பதை டெல்லிக்குப் போனவர்கள் உணர்வார்கள். இனி நம் குரலை அவர்கள் மறைக்க முடியாது. சென்னை சட்டசபையிலும், டெல்லிப் பாராளுமன்றத்திலும் நாம் தெரிவிக்கும் கருத்துக்கள் உலக முழுவதும் தெரியும். சட்டசபைகளில் நாம் பேசும் பேச்சுக்கள், சர்க்கார் 'ரிக்கார்டு'களில் பதிவாகின்றன. சட்டசபைக்கும், டெல்லிப் பாராளுமன்றத்திற்கும் சென்றால் நாம் எதைச் செய்வோம் என்று எண்ணினோமோ அதைச் செய்கிறோம்.

(பேச்சு முடியவில்லை)

### நடிகர் நாயகம் விழாவில் அண்ணா

26—10—57 மாலை மயிலையில் நடந்த நடிகர் நாயகம் விழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றிய அண்ணா அவர்களுக்கு ஓட்டல் தொழிலாளர்கள் சார்பில் தோழர் சுப்பிரமணியம் மாலையணிவித்தார்.

# நீலிக் கண்ணீரின் நோக்கம் என்ன?

## தாழ்த்தப்பட்ட மக்கள் 'பலிக் கடா'க்களா?

### காங்கிரசின் அரசியல் செப்பிடு வித்தை அம்பலமாகிறது

### சட்ட மன்றத்தில் சத்தியவாணிமுத்து பேச்சு

சென்னை, அக். 30—

திரு. காமராசர் தலைமையில் இயங்கும் அமைச்சரவை மீது நம்பிக்கையில்லை என்னும் பிரேரணை மீது சட்டமன்றத்தில் நடைபெற்றுவரும் விவாதத்தில் கலந்துகொண்ட நம் கழக உறுப்பினர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள், முதுகுளத்தூர் கலவரம் சம்பந்தமாகக் கருத்துத் தெரிவித்துப் பேசியதன் சுருக்கம் கீழே தரப்படுகிறது:—

"நாகரிகம் பெரும் அளவுக்கு முன்னேறியுள்ள இந்தக் காலத்தில் மனித உயிர் வெறிச் செயலுக்குப் பலியாக்கப்படுவது மிகவும் வருந்தத்தக்கது.

"சாதி உயர்வு—தாழ்வுதான், கலவரத்துக்குக் காரணம் என்று கூறப்படுகிறது; ஆனால் இந்த உயர்வு-தாழ்வுகளும், பூசல்களும் 1933-ம் ஆண்டிலிருந்தே இருந்து வந்திருக்கின்றன. அமைச்சர் பக்தவத்சலம்கூட அதை இங்கே ஒப்புக்கொண்டிருக்கிறார். அவ்வாறு நீண்டகாலம் இருந்துவரும் பூசலைத் தீர்த்துவைக்கவோ, அதில் தலையிடவோ முன்வராமல் இந்த அரசாங்கம் இவ்வளவு நாட்கள் இருந்தது ஏன்?"

(இந்தச் சமயத்தில் சர்க்கார் கட்சித் தலைவர் அமைச்சர் திரு. சுப்பிரமணியம் எழுந்து, 'அன்றும் தேவர் மீது வழக்குத் தொடர்ந்தது காங்கிரஸ் அரசாங்கம்தான்' என்றார்; அதற்கு 'நன்றி' என்று கூறிவிட்டு) திருமதி சத்தியவாணிமுத்து தொடர்ந்து பேசியதாவது:—

"இவ்வளவு நாட்கள் தலையிடாமல், இன்று திடீரென்று தலையிட்டதற்கு அரசியல் காரணம்தான் அடிப்படையானது என்று நான் கருதவேண்டியிருக்கிறது. 1932-ம் ஆண்டிலிருந்து 1949 வரை திரு. முத்துராமலிங்கத் தேவர் காங்கிரசில் இருந்தார்; அதனால் அவரது காலம் வலுப்பெறுவதை அனுமதிப்பதன் மூலம் காங்கிரசு பலம் பெற்றது. எனவே, தாழ்த்தப்பட்டோர் எவ்வளவு இன்னலுக்கு ஆளானாலும், காங்கிரசு அரசாங்கம் அதை மகிழ்ச்சியோடு பார்த்துக்கொண்டு இருந்தது.

"போலீசாரின் துப்பாக்கிகளை சோளத்தட்டுகள் என்றும் முதன் மந்திரி கள்ளநோட்டு அடிக்கிறார் என்றும், முதுகுளத்தூரில் மூன்றும் உலக யுத்தம் துவக்குவேன்—என்றும் ஒரு மனிதர் பேசிவந்தார்; அன்று இதையெல்லாம் அனுமதித்தவர்கள் இன்று மட்டும் துடிப்பானேன்? துள்ளுவானேன்? இப்போது ஏன் இந்த நீலிக் கண்ணீர்? இடைத் தேர்தலுக்குப் பின்னாலே திடீரென்று தாழ்த்தப்பட்டவர்கள்மீது அனுதாபம் அவர்களுக்கு எப்படி ஏற்பட்டது? எதனால்?

"இப்போது திரு. முத்துராமலிங்கத் தேவர் காங்கிரசில் இல்லை; எனவே அவரது வலுவைக் கண்டு ஆத்திரம் அடைந்த காங்கிரசு அரசாங்கம், எப்படியும் காங்கிரசின் செல்வாக்கைப் பெருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தாழ்த்தப்பட்ட மக்களை சூதாட்டக் காயாக்கியுள்ளது. பலிக்கடாக்களைப்போல் அவர்களிலே பலர் இன்று பலியிடப்பட்டிருக்கின்றனர்.

"எனவே, ஜாதிப் பூசல்கள் அரசியல்காரணத்துக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றனவே தவிர, வேறல்ல! இல்லையானால், முதுகுளத்தூர் தொகுதியில் கலவரம் நடக்காமலிருக்க சர்க்கார் கொடுத்த பாதுகாப்பு என்ன? கீழத்தூவல் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு முன்பாகவே மக்களைப் பாதுகாக்க ஏன் போலீசுப் படை? ஏழை எளியவர்களைப் பாதுகாக்க போலீசு இருக்க வேண்டுமே யொழிய போலீசுக்குப் பாதுகாப்பா?

"துப்பாக்கிப் பிரயோகம் ஒருபுறம் இருந்தாலும், விசாரணைக்கு திரு. வெங்கடேசுவரனை அனுப்பிய நேரம் சரியானதுதானா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

"கலவரம் நிறுத்தப்பட வேண்டும் என்பதிலே, உண்மையிலேயே அக்கறை காட்டுகின்ற அரசாங்கமானால், கலவரம் முழுவதும் ஓய்ந்த பிறகு விசாரணைக்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டும். கலவரம் நடந்துகொண்டிருக்கும்போதே விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்பட்டதால், முன்பே இருந்த கலவரத்தை மேலும் வளர்ந்தது. இவற்றிலிருந்து, இந்த அரசாங்கம் கலவரத்தைத் தடுப்பதற்குத் தேவையான முயற்சிகளில் ஈடுபடவில்லை என்பது மட்டுமல்ல—வேண்டுமென்றே அவற்றை வளர்த்தது என்றுதான் நான் கருதவேண்டியிருக்கிறது.

"இந்தச் சம்பவங்கள் பற்றி நடக்கும் விசாரணை எதுவானாலும் அது மேலும் துவேஷத்தை அதிகரிப்பதாக இருக்கக்கூடாது. எங்கே குத்தினார்கள்-எங்கே வெட்டினார்கள் என்பதைப்பற்றி இங்கே அழகாகப் பேசுவதைவிட, எப்படி அந்த மக்களைச் சமூகமாக வாழச்செய்வது என்பது பற்றி நாம் பேச வேண்டுமென்று விரும்புகிறேன்.

"முதுகுளத்தூர் சம்பவங்களைப் பற்றி அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பில் அல்ல; காங்கிரசுக்கு செல்வாக்கு தேடும் முறையிலே செய்யப்பட்டவைதான்."

# சட்ட மன்ற உறுப்பினரை எப்படி கைது செய்தீர்?

### கழக உறுப்பினர் கேள்வி

சென்னை, அக். 29—

சென்னைக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்க வேண்டும் என்ற முக்கிய கோரிக்கையுடன் மற்றும் சில கோரிக்கைகளுக்காக நடைபெற்ற அறப்போரில் 917 பேர் சென்னை நகர போலீஸ் சட்டத்தின் 41-வது விதியை மீறியதாகக் கைது செய்யப்பட்டனர் என்றும், கி. பி. கோ. 151-வது பிரிவின்கீழ் 35 பேர் கைது செய்யப்பட்டனர் என்றும், தண்டனை பெற்றவர்கள் விதிக்கப்பட்ட அபராதத் தொகையைக் கட்ட மறுத்து சிறை புகுந்தும் கூட, 129 பேர்களிடம் அபராதத் தொகையை வசூலிக்கக் கட்டாய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும் போலீஸ் அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்தார்.

"சட்ட மன்ற உறுப்பினர்களான திரு. நல்லசிவம், பக்கிரிசாமி பிள்ளை ஆகியோரை சட்டமன்றத் தலைவரின் அனுமதியுடன்தான் போலீஸ் கைது செய்தது" என்று, நமது கழக உறுப்பினர் தோழர் ஏ.கோவிந்தசாமி அவர்களின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் கூறினார்.

# தெ. ஆ. மாவட்ட

## கிளைக் கழக நிர்வாகிகளுக்கு வேண்டுகோள்

★

தென் ஆர்க்காடு மாவட்ட மாநாடு குறித்து மேற்கொண்டு வேலைகளை மேற்கொள்ளவும், மற்றும் கழக ஆக்கவேலைகளைப்பற்றி முடிவெடுக்கவும், நமது மாவட்டக் கழக கமிட்டிக் கூட்டத்தை 24—11—57-ம் நாளன்று விருத்தாசலத்தில் கூட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே, தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கிளைக் கழக நிர்வாகிகள் தங்கள் ஊர்க் கிளையின் தெளிவான முகவரி, செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், மாவட்டப் பிரதிநிதி ஆகியோரின் பெயர்--முகவரி ஆகியவைகளை 10-11-57-ம் நாளுக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதியனுப்ப வேண்டுகிறேன்.

தலைமை நிலையத்தில் மட்டும் பதிவு செய்து கொண்டு மாவட்டக் கழகத்தில் பதிவு செய்யப்படாமலிருக்கும் கிளைகளும் உடனே விவரத்தை எழுதியனுப்ப வேண்டுகிறேன்.

ஆங்காங்குள்ள வட்டக் கிளைகளும், கழகத் தோழர்களும் தங்களால் முடிந்த அளவுக்கு ஆங்காங்குள்ள கிளைகளுக்குத் தெரிவித்து மேற்கண்ட விவரங்களை எழுதியனுப்பச் செய்ய வேண்டுகிறேன்.

3—11—57-ம் நாளுக்குள் விவரம் எழுதியனுப்பும் கிளைகளுக்கே 24—11—57-ம் நாளில் நடக்கும் மாவட்டக் கமிட்டிக் கூட்ட அழைப்பு விடுக்க ஏதுவாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன், தற்போது சென்னை சட்டசபை நடைபெற்று வருவதால், சென்னையிலிருந்தே சில நாட்களுக்கு மாவட்டக் கழகப் பணிகளைக் கவனிக்க வேண்டியிருக்கிறபடியால், சட்டசபை முடியும்வரை கீழ்க்கண்ட முகவரிக்கே தொடர்பு கொள்ளுமாறு, தெ. ஆ. மாவட்டக் கழகத் தோழர்கள் வேண்டிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட செயற்குழுக் கூட்ட அழைப்பு தனியாக அனுப்பப்படும்.

நிர்வாகிகள் விவரமும், மற்ற கடிதங்களும் அனுப்பவேண்டிய முகவரி:—

ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.
செயலாளர்,
தெ. ஆ. மாவட்ட தி. மு. கழகம்,
'அறிவகம்'
இராயபுரம், சென்னை-13.

**ஏ. கோவிந்தசாமி M. L. A.**
தெ. ஆ. மாவட்ட செயலாளர்

# கழகக் கூட்டம்

★

**திருச்செந்தூர்:**
31—10—57 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
டி. ஆர். சுப்பிரமணியம்
ஆ. அண்ணாமலை

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.